மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள், வினா எண் 201, 202 மற்றும் 203 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 204, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

204—

கணினி பயிற்சி

***5333—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும் அரசிடம் அனுமதி பெற்று நடத்துகிறார்களா ?

(ஆ) அனுமதி பெறாதவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கணினி பயிற்சி நடத்தும் தனியார் அனைவரும், அரசிடம் அனுமதி பெற வேண்டுமென விதி ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. வினா எண் 205, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.